www.Padasalai.Net www.TrbTnpsc.com

# மூன்றாம் இடைப்பருவத் தேர்வு – 2025 தேனி
## ஒன்பதாம் வகுப்பு

நேரம்: 1.30 மணி

## அறிவியல்

மதிப்பெண்கள்:50

25/12/25

### பகுதி – அ

I சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 10x1=10

1. கலோரி என்பது எதனுடைய அலகு ?

அ) வெப்பம் ஆ) வேலை இ) வெப்பநிலை ஈ) உணவு

2. வெப்பநிலையின் S.I அலகு S

அ) ஃபாரன்ஹீட் ஆ) ஜூல் இ) செல்சியஸ் ஈ) கெல்வின்

3. செவியுணர் ஒலியினால் ஏற்படும் அதிர்வுகளின் பெரும வேகம், கீழே கொடுக்கப்பட்டுள்ள எவற்றில் பயணிக்கும் போது ஏற்படும் ?

அ) கடல் நீர் ஆ) கண்ணாடி இ) உலர்ந்த காற்று ஈ) மனித இரத்தம்

4. ________ ல் ஒலி வேகமாக பயணிக்கும்.

அ) திரவங்களில் ஆ) வாயுக்களில் இ) திடப்பொருளில் ஈ) வெற்றிடத்தில்

5. ஒரடுக்குக் கார்பன் அணுக்களால் ஆன கிராஃபீன் எதிலிருந்து கிடைக்கிறது ?

அ) வைரம் ஆ) ஃபுல்லரின் இ) கிராஃபைட் ஈ) வாயு கார்பன்

6. நெகிழி மாசுபாட்டைத் தடுக்கும் நடைமுறைகள் ________ பாதுகாப்புச் சட்டம் 1988–ன் கீழ் வருகின்றன.

அ) வனத்துறை ஆ) வனவிலங்கு இ) சுற்றுச்சூழல் ஈ) மனித உரிமைகள்

7. கீழ்கண்டவற்றில் எது அயல்நாட்டு இனம் அல்ல ?

அ) ஜெர்சி ஆ) ஹெல்ஸ்டீன் – பிரிஸன்

இ) ஷகிவால் ஈ) ப்ரெளன் சுவிஸ்

8. தேன் கூட்டில் காணப்படும் வேலைக்காரத் தேனீக்கள் எதிலிருந்து உருவாகின்றன ?

அ) கருவுறாத முட்டை ஆ) கருவுற்ற முட்டை

இ) பார்த்தினோஜெனிஸிஸ் ஈ) ஆ மற்றும் இ

9. மண்ணில்லாமல் தாவரங்களை வளர்த்தல் முறை ________

அ) தோட்டக்கலை ஆ) ஹைட்ரோபோனிக்ஸ்

இ) போமாலஜி ஈ) இவற்றில் எதுவுமில்லை

10. காளான்களின் தாவர உடலம் என்பது ________

அ) காளான் விதை ஆ) மைசீலியம்

இ) இலை ஈ) அவை அனைத்தும்

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## பகுதி – ஆ

**II குறுகிய விடையளி ஐந்து மட்டும்** **5x2=10**

11. வெப்பக்கடத்தல் – வரையறு.
12. மண்பானையில் வைத்திருக்கும் தண்ணீர் எப்போதும் குளிராக இருப்பது ஏன்?
13. சூப்பர் சோனிக் வேகம் என்றால் என்ன?
14. $C_2H_6O$ ன் மாற்றியங்களை எழுதுக.
15. தொழுஉரம் மற்றும் வெள்ளாட்டு எரு வேறுபடுத்துக.
16. காற்கறித் தோட்டங்களின் வகைகள் யாவை?
17. தேனீ வளர்ப்பு என்றால் என்ன?

## பகுதி – இ

**III விரிவான விடையளி எவையேனும் நான்கு மட்டும் விடையளி.** **4x4=16**

18. அ) கோடைகாலங்களில் மக்கள் ஏன் வெள்ளை நிற ஆடை அணிவதை விரும்புகிறார்கள்?
    ஆ) தன் வெப்ப ஏற்புத்திறன் – வரையறு.
19. SONAR வேலை செய்யும் விதத்தினை விளக்குக.
20. வேறுபடுத்துக: கிராஃபைட் மற்றும் வைரம்
21. அயல் நாட்டு இனம் மற்றும் பாரம்பரிய இனம் வேறுபடுத்துக.
22. தேனின் மருத்துவ முக்கியத்துவத்தைப் பட்டியலிடுக.
23. மண்ணில்லா நீர் ஊடக தாவர வளர்ப்பின் நிறைகளை எழுதுக.

## பகுதி – ஈ

**IV ஏதேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விரிவான விடையளி:** **2x7=14**

24. நீரின் நிலை மாற்றங்கள் யாவை? விளக்குக.
25. அ) பொருத்துக.

| | | |
|---|---|---|
| அல்கைன் | – | பளப்பளப்பான பந்து |
| ஆண்ட்ரேஜெம் | – | ஆக்ஸிஜனேற்றம் |
| $C_{60}$ | – | கிராஃபீன் |
| தெர்மாக்கோல் | – | முப்பிணைப்பு |
| எரித்தல் | – | பாலிஸ்டைரின் |

    ஆ) சங்கிலித் தொடர் என்றால் என்ன?
26. மீன் வளர்ப்புக் குளங்களின் வகைகள் யாவை?

***/***

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com